**<u>மாவட்ட உரிமையியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி</u>**

**அசல் வழக்கு எண். 102 /2019 வா.சா.1**

2025–ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 02–ம் நாள் செவ்வாய்கிழமை–ன் வாக்குமூலம் 1857 ம் ஆண்டு சட்டப்பிரிவு17(1)(அ)ன் படி ஆணை உறுதி செய்துவைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்: ஆக்கொண்டான் | தந்தை பெயர்: ரெங்கன் |
| ஊர்: | தாலுகா: |
| வயது: | தொழில்: |
| ஜாதி: | சமயம்: |

---

<u>02.12.2025</u>

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

1.நான் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் ஆறு இலக்க சொத்துக்களுக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் . மேற்படி 6 இலக்க சொத்துகளுக்கு எனது அப்பா பேரில் பட்டா இருந்ததால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி மூக்கன் எனது மூத்த சகோதரர் ஆவார் . 2ம் பிரதிவாதி கருப்பையா எனது தம்பி ஆவார் . 3ம் பிரதிவாதி கருப்பையா மகன் கருப்பையா எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்தை விற்பனை செய்ததால் அவரை தரப்பினராக சேர்ந்து உள்ளேன் . 4,5,6 ,7 பிரதிவாதிகள் எனது சகோதரிகள் ஆவார்கள். 8, 9, 10 பிரதிவாதிகள் எனது தங்கை பழனியாயின் வாரிசுகள் ஆவார்கள் . தற்போது பழனியாயை தவிர மற்ற அனைவரும் உயிரோடு உள்ளனர். நான் 1/7 பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் . வா.சா.ஆ 1 ல் கண்ட சொத்துக்களுக்கு கருப்பையா பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 2 ல் கண்ட சொத்துக்களுக்கு மூக்கன் பேரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் வா.சா.ஆ 3 ல் கண்டச் சொத்துக்களுக்கு என் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் ஆண்டிச்சாமி என்பவருக்கு சர்வே எண் 290 /2 பி சொத்தில் என் பாகத்தை கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான் . நான் கிரையம் கொடுத்த பாகம் போக மீதி பாகம் சர்வே எண் 290 /2 பி 2 ஆகும். அதனை நான் 18 வது இலக்க சொத்தாக சேர்த்து உள்ளேன். நான் கிரையம் கொடுத்த சொத்துக்களை போகம் மீதமுள்ள சொத்துக்கள் கருப்பையா மற்றும் மூக்கனுக்கு வாத்தியம் என்றாலும் அந்த சொத்துகளுக்கு பாகம் கோர எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

2. சர்வே எண் 7/7 மேற்படி சொத்தை 2ம் பிரதிவாதி கருப்பையா வள்ளியம்மாள் பிரபாகரன் கிரயம் வாங்கிய சொத்து என்றால் சரியல்ல எனது அப்பா பெயரில் உள்ள சொத்துக்களுக்கு

மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் . கிரையச் சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்யவில்லை. தாவா 1 வது இலக்க சொத்து 2 ம் பிரதிவாதி கிரையச் சொத்து என்பதால் அதில் பாகம் கோர எனக்கு உரிமை இல்லை என்றால் சரியில்ல . அசல் வழக்கு எண் 233/2004 வழக்கு திருப்பத்தூர் உரிமைகள் நீதிமன்றத்தில் நடைபெற்றது என்றால் சரிதான் .மேற்படி வழக்கில் நான் சாட்சியம் அளிக்கவில்லை . பிரதிவாதி மூக்கனின் பாகம் 30 வருடத்திற்கு முன்பாகவே பிரிக்கப்பட்டது என்றால் சரிதான் . எனது அப்பாவின் இறப்பிற்கு 10 வருடத்திற்கு முன்பே பாகம் பிரிக்கப்பட்டு விட்டது . எனது அப்பா 1980– 1982 ல் இறந்தார் எந்த வருடம் என்று சரியாக தெரியவில்லை . பிரிக்கயிருக்கப்பட்ட சொத்துக்களை மூக்கன் அவரது சொத்தை தனியாக அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான் . 2 ம் பிரதிவாதி கருப்பையாவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை கருப்பையா தனியாக அனுபவித்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . 2 ம் பிரதிவாதி கருப்பையா அவர் பாகச் சொத்தை ஆண்டு சாமிக்கு கிரையம் கொடுத்தாரா என்றால் கொடுத்திருப்பார் . எங்கள் குடும்பத்தில் 30 வருடத்திற்கு முன்பாகவே பாகம் ஏற்பட்டு பாகத்தில் பிரிக்கப்பட்ட சொத்துக்களை அவரவர் தனித்து அனுபவத்தை வருகிறோம் என்றால் சரியல்ல . மேற்படி பிடிக்கப்பட்ட சொத்துகளுக்கு அவரவர் பேரில் தனிப்பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல . என் பாகத்திற்கு கிடைக்கப்பட்ட சொத்துக்களை நான் கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல . இரண்டாம் பிரதிவாதியும் அவர் பாகத்தில் கிடைத்த சில சொத்துக்களை கிரயம் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . என் பாகச் சொத்துகளுக்கு பட்டா ஏற்பட்ட விவரம் எனக்கு தெரியாது. என் பேரில் பட்டா ஏற்பட்ட என் பாகச் சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்காமல் 1 ,2 பிரதிவாதிகள் பேரில் ஏற்பட்ட பாகச் சொத்துக்களை மட்டும் சேர்த்து வழக்கு தாக்கம் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல .

3. 1,2 பிரதிவாதிகளுக்கு ஏற்பட்ட பாகத்தை மறைத்து வழக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல. இரண்டாம் பிரதிவாதி அவர் பாகச் சொத்துக்களை கிரயம் கொடுத்துள்ளதால் மேற்படி கிரையப் பத்திரம் செல்லாது என்று நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதல்ல என்றால் சரியல்ல 30 வருடத்திற்கு முன்பாகவே எனது அப்பா காலத்தில் எங்களுக்குள் பாகம் ஏற்பட்டதால் மீண்டும் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்து பாக உரிமைகோர இயலாது என்றால் சரியல்ல. பாக உரிமை கோரி வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றால் எனது சொத்துக்களையும் சேர்த்து வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் பாகம் ஏற்பட்டதால் தான் எனது சொத்துக்களை மறைத்து இவ்வழக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல.

(வழக்கறிஞர் வேண்டகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)